1980 பிப்ரவரி 13]

வீடுகள் இடியும் போது ஏற்படும் மக்கள் உயிர்சேதமும் பொருட்சேதமும் அந்த கிராம மக்கள் இடையே பீதியை ஏற்படுத்துவது குறித்து''

அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

7. அரசினர் தீர்மானம்

பேரவை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

''பேரவையின் 25(1) விதியின்படி பேரவையை இன்றிலிருந்து (13—2—1980) மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கலாம்,''

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பெறுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர் பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 6—7—1979-ஆம் தேதியிடப்பெற்ற 1701-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு 1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3)-ஆம் பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS